மூடுருவிச்சென்று பார்க்கப்படும்போது 'எது ஆபாசம்?' 'இது ஆபாசம் தானா?' என்ற கேள்வி எழுகிறது. எது ஆபாசம் என்பது அவரவர்கள் வியாக்கியானம் செய்வதில்தான் இருக்கிறது. ஆபாசம் என்பது ஒவ்வொரு வருடைய மனப்பக்குவத்தைப் பொறுத்திருக்கிறது.

ஹாஜி ம. மு. பீர்முகம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, போக்கு வரத்து நெரிசல் உள்ள இடங்களில் ஆபாசமான பாலுணர்ச்சியை ஊட்டக் கூடிய விளம்பரங்கள் இருப்பதால் அடிக்கடி விபத்துக்கள் நேரிடுகின்றன என்ற குறைபாடு இருக்கிறதே, அதை அரசு அறியுமா? போக்குவரத்து நெரிசல் அதிகம் உள்ள இடங்களில் இதுபோன்ற விளம்பரங்கள் வைப்பதை அரசு தடை செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அப்படிப்பட்டவை களை தடை செய்ய வேண்டியது முக்கியம். அதுபற்றிக் காவல் துறை யினருக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. கூடுமானவரையில் கனம் உறுப்பினர் அப்பேர்பட்ட இடங்களுக்கு போவதைத் தவிர்ப்பது நல்லது.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : தலைவர் அவர்களே, அமெரிக்கா போன்ற வெளிநாட்டு ஆபாச நாகரீகம் நிறைந்த படங்கள், தமிழ் நாட்டு பண்பாட்டிற்கு விரோதமாக இருப்பவையான படங்கள் சுவர்களில் ஒட்டப் படுகிறதே, அதைத் தடை செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் இதற்கு முன்பே பதில் சொன்னேன். ஆபாசம் என்பதை அவரவர்களுடைய மனப் பக்குவத்தின் அடிப்படையில் நிர்ணயிக்க வேண்டியிருக்கிறது. நம்மால் ஆபாசம் என்று கூறப்படுபவை, நீதிமன்றத்தின் துணைக்கொண்டு, ஆபாச மற்றவை என்று நிலைநாட்டினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஒருவருக்கு ஆபாசம் என்று தோன்றுபவை இன்னொருவருக்கு ஆபாசமற்றதாகத் தோன்று கிறது. அவரவர்களின் மனப்பக்குவத்தைக் கொண்டுதான் ஆபாசம், ஆபாச மில்லை என்று சொல்கிறார்கள். அதற்காகத்தான் படத் தணிக்கை செய்யப் பட்டு வருகிறது. இதை முழுமையாகச் செய்ய நல்ல எண்ணத்தின் அடிப் படையில் அமைந்த பொது மக்களின் ஒத்துழைப்பு இந்த அரசுக்குத் தேவை.

சித்த மருத்துவ முறை

*411 வினா.—திரு. மா. பா. சாரதி : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு மாவட்டத் தலைமை மருத்துவ மனையிலும் சித்த வைத்தியப் பிரிவு ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

(இ) இதுவரை எந்தெந்த மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன?

(உ) வட ஆர்க்காடு மாவட்டத்தில் வேலூரில் எப்போது ஏற்படுத்தப் படும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) உண்டு.

1970 மார்ச் 17]

(இ) & (உ) 1967-ஆம் ஆண்டில் முதன் முதலாக திருச்சிராப்பள்ளி மாவட்ட மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவு ஒன்று தொடங்கப் பட்டது. 1969-70-ஆம் ஆண்டில் மேலும் வேலூர், கடலூர், சேலம், கோயம் புத்தூர், இராமநாதபுரம் ஆகிய ஐந்து ஊர்களிலுள்ள மாவட்ட மருத்துவ மனைகளில் சித்த மருத்துவப் பிரிவுகள் தொடங்க அண்மையில் ஆணை பிறப் பிக்கப்பட்டுள்ளது.

* 412 வினா—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தனியாகச் சித்த முறையில் பயிற்சி பெற்றோருக்கு அரசாங்கம் தேர்வு நடத்திப் பதிவு வழங்குவதை எவ்வளவு காலத்திற்கு நீட்டித்துள்ளது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: 1—9—1967-ல் இருந்து மூன்று ஆண்டு காலத்திற்கு நீட்டித்துள்ளது.

* 413 வினா.—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசாங்கப் பதிவு பெற்றுச் சித்த முறையைக் கற்றுக்கொடுக்கும் தனியார் கல்வி நிலையங்கள் எத்தனை எங்கெங்கே இருக்கின்றன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அரசு பதிவு பெற்றுச் சித்த முறையைக் கற்றுக்கொடுக்கும் தனியார் கல்வி நிலையங்கள் தற்சமயம் தமிழகத்தில் எங்கும் இல்லை.

* 414 வினா.—திரு. பெ. மலைச்சாமி: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பாளையங்கோட்டை அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரியில் பட்டம் பெற்று வெளியேறும் மாணவர்களை அரசு எந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள உத்தேசித்துள்ளது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: சென்னை அரும்பாக்கத்தில் உள்ள இந்திய மருத்துவ மனையிலும் நகராட்சிகளாலும், ஊராட்சி ஒன்றியங் களாலும் நடத்தப்படும் இந்திய மருத்துவ மனைகளிலும், மாவட்ட மருத்துவ மனைகளில் தொடங்கப்படும் சித்த மருத்துவப் பிரிவுகளிலும் மருத்துவர்களாக நியமிக்கப்படுவர். பாளையங்கோட்டை இந்திய மருத்துவக் கல்லூரியில் போதனை ஆசிரியர்களாகவும் நியமிக்கப்படுவார்கள்.

புலவர் பொ. பொன்னம்பலம்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, சித்த வைத்திய அதாவது நாட்டு வைத்திய முறைக்கு மத்திய அரசு எவ்வளவு நிதி ஒதுக்கித் தருகிறது? அந்த நிதி சரிவர பயன்படுத்தப் படுகிறதா என்பதை அறியவிழைகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இதுவரை சித்த வைத்திய முறைக்கு மத்திய அரசு பணம் தந்ததாகத் தகவல் இல்லை. தமிழக அரசே தன் நிதியில் இருந்து இதற்கான முயற்சியில் ஈடுபடுகின்றன.